**துறையூர்நகராட்சி**

2022–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30.12.2022 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நகராட்சி நகர் மன்ற கூட்ட அரங்கில் கீழ் கண்ட பொருள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய அவசரக்கூட்டத்தின் நடவடிக்கைகள்

முன்னிலை: நகர்மன்றத்தலைவர்
துறையூர்.

<table>
<tr><th>மன்ற கூட்டம் நடை பெற்ற நாள்</th><th colspan="2">வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்</th><th>மன்றத்தின் தீர்மானம்</th></tr>
<tr><td>30.12.2022</td><td>01</td><td>துறையூர் நகராட்சியில் ஒரு JCB வாகனம் இயக்குவதற்கு ஒப்பந்த அடிப்படையில் 1.12.2022 முதல் 30.11.2023 வரை ஒருவருட காலத்திற்கு சப்ளை செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.2.60 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.275 நாள்.31.10.2022–ல் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து 18.11.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளியில் சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.14% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.K.சரவணன், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.71% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1–ல் உள்ள திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.14% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.<br>
(ந.க.எண்.2585/2021/இ1)<br>
அலுவலக குறிப்பு :<br>
1. மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் குறிப்பிட்ட திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்:318<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr>
<td>30.12.2022</td>
<td>02</td>
<td>துறையூர் நகராட்சி உள்ள ஜெராக்ஸ் இயந்திரம் பழுது அடைந்துள்ளதால் அலுவலகத்திற்கு தேவையான படிவங்கள், நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டிய கருத்துருக்கள், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டிய அறிக்கைகள் அனுப்ப மிகவும் சிரமமாக உள்ளது. ஆகவே ஜெராக்ஸ் இயந்திரத்தினை பழுது நீக்கம் செய்ய இந்நகர்மன்ற தீர்மான எண்.273 நாள்.31.10.2022–ல் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து 21.11.2022 வரை விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>Marvel Computers & Electronics<br>No.2, CTO Colony, Rajaji Nagar,<br>Alagapuram, Salem.</td><td>ரூ.7856/–</td></tr>
<tr><td>2</td><td>MM Office Automation<br>No.351, 1st floor, CTO Colony, Rajaji Nagar,<br>Alagapuram, Salem.</td><td>ரூ.9036/–</td></tr>
<tr><td>3</td><td>Digital India Solutions,<br>1/176–E, New sundar Nagar,<br>Mallamoopampatti</td><td>ரூ.9770/–</td></tr>
</table>
மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் வ.எண்.1–ல் உள்ள Marvel Computers & Electronics, Salem அவர்கள் வழங்கிய விலைப்புள்ளி விலைவிகிதம் குறைவாக வழங்கி உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
(ந.க.எண்.3365/2022/இ1)<br>
அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:319<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.12.2022</td>
<td>03</td>
<td>துறையூர் நகராட்சி வார்டு எண்.1 கோவிந்தாபுரம் காலனியில் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு பைப்லைன் அமைத்து குடிநீர் விநியோகம் செய்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
(ந.க.எண். 4208/2022/இ1)<br><br>
அலுவலக குறிப்பு :<br>
1 மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2 மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்</td>
<td>தீர்மான எண்:320<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.12.2022</td>
<td>04</td>
<td>துறையூர் நகராட்சி வார்டு எண்.2–ல் மினி பவர்பம்புடன் கூடிய ஆழ்துளைக்கிணறு அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
(ந.க.எண். 4209/2022/இ1)<br>
அலுவலக குறிப்பு :<br>
1 மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2 மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:321<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 30.12.2022 | **05** | துறையூர் நகராட்சி வார்டு எண்.3–ல் மினி பவர்பம்புடன் கூடிய ஆழ்துளைக்கிணறு அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண். 4210/2022/இ1)<br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:322 அனுமதிக்கப்பட்டது |
| 30.12.2022 | **06** | துறையூர் நகராட்சி வார்டு எண்.4 கீழ வடக்குத்தெருவில் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு பைப்லைன் அமைத்து குடிநீர் விநியோகம் செய்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண். 4211/2022/இ1)<br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2 மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்:323 அனுமதிக்கப்பட்டது |
| 30.12.2022 | **07** | துறையூர் நகராட்சி வார்டு எண்.6–ல் மினி பவர்பம்புடன் கூடிய ஆழ்துளைக்கிணறு அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண். /2022/இ1)<br>**அலுவலக குறிப்பு :**<br>1 மன்றம் அனுமதிக்கலாம்.<br>2 மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:324 அனுமதிக்கப்பட்டது |
| 30.12.2022 | **08** | துறையூர் நகராட்சி வார்டு எண்.7 முத்துநகரில் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு பைப்லைன் அமைத்து குடிநீர் விநியோகம் செய்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண். 4212/2022/இ1)<br>. **அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2 மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்:325 அனுமதிக்கப்பட்டது |
| 30.12.2022 | **09** | துறையூர் நகராட்சி வார்டு எண்.9–ல் மினி பவர்பம்புடன் கூடிய ஆழ்துளைக்கிணறு அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண். 4213/2022/இ1)<br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>. | தீர்மான எண்:326 அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 30.12.2022 | **10** | துறையூர் நகராட்சி வார்டு எண்.10–ல் மினி பவர்பம்புடன் கூடிய ஆழ்துளைக்கிணறு அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.4214/2022/இ1<br><br>**அலுவலக குறிப்பு :**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2 மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்:327<br>அனுமதிக்கப்பட்டது |
| 30.12.2022 | **11** | துறையூர் நகராட்சி வார்டு எண்.11 பெரியகடைவீதியில் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு பைப்லைன் அமைத்து குடிநீர் விநியோகம் செய்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.4215/2022/இ1)<br><br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2, மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்:328<br>அனுமதிக்கப்பட்டது |
| 30.12.2022 | **12** | துறையூர் பழைய நகராட்சி அலுவலகத்தில் காவேரி குடிநீர் கீழ்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அருகிலுள்ள சுற்றுசுவர் இடிந்த நிலையில் உள்ளதால் குடிநீர் பாதுகாப்பு நலன் கருதி உடன் சுற்றுசுவர் அமைத்திட மதிப்பீடு ரூ.1.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண். 4218/2022/இ1)<br><br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:329<br>அனுமதிக்கப்பட்டது |
| 30.12.2022 | **13** | துறையூர் பழைய நகராட்சி அலுவலக வளாகத்தில் ஏற்கனவே உள்ள கழிவறைகள் பழுதடைந்து விட்டதால் தற்போது அக்கழிவறையை பழுதுநீக்கம் செய்ய மதிப்பீடு ரூ.1.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**(ந.க.எண். 4219/2022/இ1)**<br><br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>1. மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்:330<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 30.12.2022 | **14** | துறையூர் நகராட்சி வார்டு எண்.3 வடக்குத்தெரு, கடைக்கால் சந்தில் ஏற்கனவே இருந்த சின்டெக்ஸ் டேங்க் பழுதடைந்துள்ளதால் புதிதாக மாற்றி அமைக்கவும், பைப்லைன் அமைக்கும் பணி மற்றும் இதர பணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.1.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**(ந.க.எண். 4220/2022/இ1)**<br><br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:331<br>அனுமதிக்கப்பட்டது |
| 30.12.2022 | **15** | துறையூர் நகராட்சி வார்டு எண்.2 கிழக்குத்தெப்பக்குளத் தெருவில் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு பைப்லைன் அமைக்கும் பணி மற்றும் இதர பணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.1.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**(ந.க.எண். 4221/2022/இ1)**<br><br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:332<br>அனுமதிக்கப்பட்டது |
| 30.12.2022 | **16** | துறையூர் நகராட்சியில் 15–வது நிதி ஆணையம் 2022–23–ன் கீழ் நகர்ப்புற சுகாதார மற்றும் நல மையம் அமைக்கும் பணி மேற்கொள்ள ரூ.25.00 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.35132/ 2022/CFC–1 நாள்.12.10.2022–ல் ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டுள்ளது. மேற்படி சுகாதார மற்றும் நகர்நல மையம் அமைக்க வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும், மருத்துவமனை சாலையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் அமைக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**(ந.க.எண்.3957/2022/இ1)**<br><br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.. | தீர்மான எண்:333<br>அனுமதிக்கப்பட்டது |
| 30.12.2022 | **17** | துறையூர் நகராட்சியில் தூய்மை பாரத இயக்கம் 2.0 (SBM 2.0)–ன் கீழ் சொரத்தூர் சாலை உரக்கிடங்கு மற்றும் பெரியார் நகர் உரக்கிடங்கு ஆகிய 2 இடங்களில் வளமீட்பு மையம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.85.00 இலட்சத்திற்கு ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறவும், மேற்படி ஒதுக்கீடு செய்யப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**(ந.க.எண்.4162/2022/இ1)**<br><br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:334<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 30.12.2022 | **18** | துறையூர் நகராட்சி வார்டு எண்.5–ல் திரௌபதி அம்மன் கோவில் தெருவில் மினி பவர்பம்புடன் கூடிய ஆழ்துளைக்கிணறு அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**(ந.க.எண். 4224/2022/இ1)**<br>அலுவலக குறிப்பு :<br>1 மன்றம் அனுமதிக்கலாம்.<br>2 மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்:335<br>அனுமதிக்கப்பட்டது |
| 30.12.2022 | **19** | துறையூர் நகராட்சி வார்டு எண்.7 பெரியார் நகரில் மினி பவர்பம்புடன் கூடிய ஆழ்துளைக்கிணறு அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**(ந.க.எண். 4223/2022/இ1)**<br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2 மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்:336<br>அனுமதிக்கப்பட்டது |
| 30.12.2022 | **20** | துறையூர் நகராட்சியில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் நகராட்சி பகுதிகளுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய அறிவுறுத்தியதன் அடிப்படையில் பழைய நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள தரைமட்டத்தொட்டியிலிருந்து தற்போது 4 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு ஒரு மின்மோட்டார் பொருத்துவதற்கும் மற்றும் மின்வயரிங், பேனல் போர்டு புதிதாக பொருத்துவதற்கு பணி மேற்கொள்ள மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**(ந.க.எண். 4225/2022/இ1)**<br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:337<br>அனுமதிக்கப்பட்டது |
| 30.12.2022 | **21** | துறையூர் நகராட்சியில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் நகராட்சி பகுதிகளுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய அறிவுறுத்தியதன் அடிப்படையில் பழைய நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள தரைமட்டத்தொட்டியிலிருந்து தற்போது 4 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீரேற்றம் செய்யப்பட்டு வருவதால் குடிநீர் விநியோகம் காலதாமதம் ஆவதாலும் கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து பழைய நகராட்சி அலுவலகத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு புதிய குடிநீர் ஏற்றுவதற்கு ஏதுவாக பைப்லைன் அமைத்து பணி மேற்கொள்ள மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**(ந.க.எண். 4226/2022/இ1)**<br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:338<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 30.12.2022 | **22** | நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களது ந.க.எண்.28369/J3–2018 நாள்.10.12.2018 –ம் தேதிய செயல்முறை ஆணையில் துறையூர் நகாட்சியில் (Out sourcing) தனியார் மயத்தின் மூலமாக 81 தூய்மை பணியாளர்களை கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணியை மேற்கொள்ள அனுமதித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. துறையூர் நகராட்சிப்பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்ட விதிகள் 2000–ன்படி வீடு வீடாக குப்பை சேகரிக்கும் பணி அனைத்து வார்டுகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு நகராட்சியில் அனுமதிக்கப்பட்ட தூய்மை பணியாளர்கள் பணியிடங்கள் 89 உள்ள நிலையில் தற்பொழுது 41 தூய்மை பணியாளர்கள் மட்டுமே உள்ளனர். தூய்மை பணியாளர்கள் போதிய அளவில் இல்லாததால் குப்பை சேகரித்தல் சாக்கடை சுத்தம் செய்தல் மக்கும் குப்பையிலிருந்து உரம் தயார்செய்தல் உள்ளிட்ட சுகாதாரப்பணிகள் முழுமையாக மேற்கொள்ள இயலவில்லை.<br>நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் தூய்மை பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமையின் மூலமாக நியமித்துக் கொள்வதற்கான நிர்வாக அனுமதி வரும் வரையில் இந்நகராட்சிப்பகுதியில் தற்போது தூய்மை பணியின் அத்தியாவசிய தேவையினை கருத்தில் கொண்டு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் குப்பை அகற்றுதல், தெருக்கள் சுத்தம் செய்தல், சாக்கடை சுத்தம் செய்தல், பேருந்து நிலையம், காய்கறி மார்க்கெட் கழிவுகளை அகற்றுதல், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள் மற்றும் பிரசிதிபெற்ற சிவன் மற்றும் பெருமாள் கோவில்களுக்கு தினசரி அதிகமாக பொதுமக்கள் வந்து செல்லும் இடங்கள், கிராமபுற பகுதியிலிருந்து மருத்துவமனைக்கு வந்து செல்வதாலும், 18 பள்ளிகளில் வெளியூரிலிருந்து மாணவர்கள் படிப்பிற்காக வருவதாலும், பொதுமக்கள் அதிகம் கூடுவதாலும், உருவாக கூடிய குப்பைகளை பொதுசுகாதாரம் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி உடனுக்குடன் அகற்றிட வேண்டிய சூழ்நிலை இருப்பதாலும் இந்நகராட்யின் நிதிநிலையை கவனமுடன் பரிசீலினை செய்யப்பட்டு நிர்வாக நலன் கருதியும் தூய்மை பணியாளர்கள் 32 நபர்களையும் ஏற்கனவே உள்ள சுயஉதவிக்குழு மூலமாக நியமித்துக்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.276 நாள். 31.10.2022–ல் 01.11.2022 முதல் 31.12.2022 முடிய 2 மாதங்களுக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஊதிய விகிதத்தின்படி நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் நிலா சுயஉதவிக்குழு என்ற குழுவிற்கு அனுமதி வழங்கப்பட்டது.<br>மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடமிருந்து அனுமதி பெறப்படும் வரையில் சுயஉதவிக்குழு மூலம் தினக்கூலி அடிப்படையில் பொதுசுகாதாரம் மற்றும் நகராட்சி நிர்வாகம் கருதி 01.01.2023 முதல் 28.02.2023 வரை நிலா மகளிர் சுயஉதவிக்குழு மூலம் 32 பணியாளர்களை நியமித்து மாவட்ட ஆட்சியர் திருச்சிராப்பள்ளி அவர்களது ந.க.எண்.J3/9779/2018 நாள்.16.08.2019 செயல்முறை ஆணையில் கண்டுள்ள II Unskilled Employee–க்கான (2019–20)–ம் ஆண்டுக்கான தினக்கூலி அடிப்படையில் ஊதியம் ரூ.385/– அடிப்படையில் ரூ.7.30 இலட்சம் மதிப்பீட்டில் மேற்காணும் பணியாளர்களுக்கு செலவினம் மேற்கொள்ளவும் மற்றும் இச்செலவினம் வருவாய் நிதியில் செய்துகொள்ள | தீர்மான எண்:339<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.**4244/2018/எச்1)**<br>**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம். | |
| 30.12.2022 | **23** | இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பொதுசுகாதார பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண். 28369/து3 நாள் 10.12.2018 உத்திரவின் படி 81 மனித ஆற்றல் சப்ளை செய்ய அவுட் சோர்சிங் முறையில் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து நகர் மன்ற தீர்மான எண்.277, நாள். 31.10.2022–ல், 01.11.2022 முதல் 31.12.2022 முடிய 2 மாதங்களுக்கு மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் காயா ஆண்கள் சுயஉதவிக்குழுவிற்கு அனுமதி வழங்கப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் வெளிக்கொணர்வு முகமையின் மூலமாக, தூய்மைப்பணியாளர்களை நியமித்துக்கொள்வதற்கான நிர்வாக அனுமதி வரும் வரையில் இந்நகராட்சி பகுதியில் தற்போது துப்புரவு பணியில் அத்தியாவசிய தேவையினை கருத்தில் கொண்டு தொடர்ந்து பொதுமக்கள், பொது சுகாதாரத்தை பேணி காக்கும் பொருட்டும் நகராட்சியின் நிர்வாக நலன் கருதியும் திடக்கழிவு மேலாண்மை பணி, சுகாதார பணிகள், நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் பணிக்கும், தரம் பிரிக்கப்பட்ட உலர்கழிவுகளை RCC மையத்தில் சேகரித்து வைத்து சிமெண்ட் நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்தல், E–WASTE மின்கழிவுகளை சேகரித்து வைத்து அபாயகரமான கழிவுகளை Incinators எரிகலன்களில் எரித்து அப்புறப்படுத்துதல், உருவாக்கிய உரங்களை சலித்து சேகரித்து வைத்தல், போன்ற பணிகளை மேற்கொள்ளவும்<br>மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடமிருந்து வெளிக்கொணர்வு முகமையின் மூலமாக, தூய்மைப் பணியாளர்களை நியமித்துக்கொள்வதற்கான நிர்வாக அனுமதி பெறப்படும் வரையில் சுயஉதவிக்குழு மூலம் தினக்கூலி அடிப்படையில் பொதுசுகாதாரம் மற்றும் நகராட்சி நிர்வாகம் கருதி 01.01.2023 முதல் 28.02.2023 வரை காயா ஆண்கள் சுயஉதவிக்குழு மூலம் 24 பணியாளர்களை நியமித்து மாவட்ட ஆட்சியர் திருச்சிராப்பள்ளி அவர்களது ந.க.எண்.J3/9779/2018 நாள்.16.08.2019 செயல்முறை ஆணையில் கண்டுள்ள II Unskilled Employee–க்கான (2019–20)–ம் ஆண்டுக்கான தினக்கூலி அடிப்படையில் ஊதியம் நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு ரூ.385/– என்ற விகிதத்தில் தினக்கூலி அடிப்படையில் ரூ.5.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்காணும் பணியாளர்களுக்கு செலவினம் மேற்கொள்ள வருவாய் நிதியிலிருந்து செய்துகொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.**4244.2018.எச்1)**<br>**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்:340<br>அனுமதிக்கப்பட்டது |
| 30.12.2022 | **24** | துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் திருச்சிராப்பள்ளி மாவட்டம் அவர்களின் கடிதம் எண்.0830/அ8/2022/, நாள்.12.04.2022–ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு தடுப்பு நடவடிக்கை பணிகளை உற்பத்தி கலன்களை அகற்றுதல்,காய்ச்சல் ஏற்பட்ட நபர்களை கண்டறிதல், கணக்கெடுத்தல் போன்ற பணிகளை வீடு வீடாக சென்று மேற்கொள்ள 30 களப்பணியாளர்களை | தீர்மான எண்:341<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | நியமித்துக் கொள்ள அறிவுறைகள் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இந்நகராட்சியில் டெங்கு களப்பணியாளர்கள் 30 எண்ணிக்கையில் சுய உதவிக்குழு மூலமாக நியமித்து 01.06.2022 முதல் 31.12.2022 வரை பணி மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் பொதுசுகாதாரம் மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் வீடுகள், அரசு, அரசு சாரா அலுவலகக் கட்டிடங்கள் ஆகியவற்றில் மேற்கொள்ளவும் அரசு மற்றும் தனியார் மருத்துவமனையிலிருந்து காய்ச்சல் கண்டவர்களின் அறிக்கை பெறவும். பொது மக்களின் நலன்கருதி தொடர்ந்து செம்பருத்தி சுயஉதவிக்குழு மூலமாக 01.01.2023 முதல் 28.02.2023 வரை (இரண்டு மாதங்களுக்கு) பணிபுரிய மன்ற பொருள் வைக்க ஒப்புதலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சியர் திருச்சிராப்பள்ளி 2019–20–ம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி **ரூ.385/–** அடிப்படையில் **ரூ 6.82 இலட்சம்** மதிப்பீட்டில் மேற்காணும் பணியாளர்களுக்கு செலவினம் மேற்கொள்ளவும் மற்றும் இச்செலவினம் வருவாய் நிதியில் செய்துகொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>**(ந.க.எண்.1220/2022/எச்1)**<br>**அலுவலக குறிப்பு:மன்றம் அனுமதிக்கலாம்**. | |
| 30.12.2022 | **25** | நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவின்படி ந.க.எண்.4840/2018/எச்1 நாள்.21.02.2019 6 LCV வாகனங்கள் 1 காம்பாக்டர் வாகனத்திற்கு Out Sourcing முறையில் 7 ஓட்டுநர்களை H.M.S தனியார் ஒப்பந்த நிறுவனத்தின் மூலமாக நியமித்துக்கொள்ள பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் H.M.S நிறுவனத்தின் மூலமாக 01.11.2022 முதல் 31.12.2022 வரை 7 ஓட்டுநர்கள் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுகாதார பணியாளர்கள் மற்றும் ஓட்டுநர்களை நியமித்துக்கொள்வதற்கான வெளிகொணர்வு முகமைக்கான (Out Sourcing) நிர்வாக அனுமதி வரும் வரையில் பொதுமக்கள் மற்றும் பொதுசுகாதாரம் நலன்கருதி இந்நகராட்சியின் பொதுசுகாதார வாகனங்களான 6 LCV, 1 காம்பெக்டர் வாகனங்களை இயக்குவதற்கு ஓட்டுநர்களை நியமித்துக்கொள்ள HMS என்ற நிறுவனத்தின் மூலமாக ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விகிதத்தில் கூடுதலாக இரண்டு மாதங்களுக்கு ரூ.473.25/– ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு என்ற வீகிதத்தில் 7 ஒட்டுநர்களுக்கு 01.01.2023 முதல் 28.02.2023 வரை (இரண்டு மாதங்கள்) பணி அமர்த்தி கொள்ளவும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.2.00 மதிப்பீட்டில் மேற்காணும் பணியாளர்களுக்கு செலவினம் மேற்கொள்ள வருவாய் நிதியிலிருந்து செய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.**4840/2018/எச்1)**<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம். | தீர்மான எண்:342<br>அனுமதிக்கப்பட்டது |
| 30.12.2022 | **26** | இந்நகராட்சிக்குட்பட்ட தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம் திறந்தவெளி கழிப்பிடமற்ற நகராட்சியாக அறிவிக்கப்பட்டு (ODF) பராமரிக்கப்பட்டு வரும் நிலையில் தற்போது ODF+ சான்று பெறவும் மற்றும் இந்நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக மூன்று நட்சத்திர அங்கீகார சான்று பெறவும் பொதுமக்களின் ஆட்சேபனைகள் மற்றும் கருத்துக்களை தெரிவிக்கும் விதமாக | தீர்மான எண்:343<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td></td><td>தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளிதழ்களில் ஒருநாள் மட்டும் பிரசுரம் செய்து 15 தினங்களில் பொது மக்களின் எவ்வித ஆட்சேபனைகள் மற்றும் கருத்துக்களும் பெறப்படவில்லை என்பதையும் இச்செய்தினை பொதுமக்களுக்கு அறிவிக்கும் பொருட்டு பிரசுரம் செய்யவும் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் திருச்சிராப்பள்ளி அவர்களின் மூலமாக தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் விளம்பர பிரசுரம் செய்ததற்கு உத்தேச செலவினம் ரூ.24084/-க்கு மன்றம் அனுமதி வழங்கலாம். . (ந.க.எண். 3870/2022/எச்1)</td><td></td></tr>
<tr><td>30.12.2022</td><td>27</td><td>இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை உரிமம் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுக்கான 2022-2025ம் ஆண்டு வரைக்கான உரிமம் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மற்றும் சிறப்பு நிபந்தனைகள் படி அனுபவித்துக்கொள்ளும் உரிமைக்கு ஆண்டு குத்தகை இனம் 1.பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு தினசரிகட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம், 2.நகராட்சி ஆடுவதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூல் செய்துக்கொள்ளும் குத்தகை உரிமம், 3. அண்ணா பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமம், 4.சுவாமிநாதன் தினசரிமார்கெட் தரைகடை குத்தகை உரிமம், மற்றும் ஏலம்போகமல் உள்ள சுவாமிநாதன் தினசரி மார்கெட் கடைகள் 15,16,17,18,22,34, 42,43.44. மற்றும் 45 க்கான குத்தகை உரிமம் , வாரச்சந்தையில் உள்ள ஆட்டிறைச்சி கடைகள் 3,4,6,8,9,10,11,12,13,14,15,16, மற்றும் 17 அண்ணா பேருந்து நிலையம் பழைய நகராட்சி அலுவலகவளாக புதிய கடை எண் 2,4,5,6,7,9,10,18,23 மற்றும் 24 கடைகளுக்கும் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 27.12.2022-ம் தேதி நடைபெறும் விபரத்தினை கீழ்கண்ட தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.<br>
<table>
<tr><th>வ. எண்</th><th>விளம்பரம்செய்யப்பட்ட நாளிதழ் பெயர்</th><th>விளம்பரம் செய்யப்பட்டநாள்</th><th>தொகை (ரூபாய்)</th></tr>
<tr><td>1</td><td>தினத்தந்தி திருச்சி பதிப்பு</td><td>10.12.2022</td><td>ரூ.15120/-</td></tr>
</table>
மேற்கண்ட நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு THE DAILY THANTHI. THE THANTHI TRUST , TRICHY, நிறுவனம் ரூ.15,120/- வழங்க கேட்டுக்கொண்டுள்ளது. ஆகையால் தொகை வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
ந.க.எண்.1297/2022/அ1<br>
அலுவலககுறிப்பு: அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்:344<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>30.12.2022</td><td>28</td><td>துறையூர்நகராட்சிக்கு சொந்தமான சாமிநாதன் தினசரிகாய்கனி மார்க்கெட்டில் கட்டியுள்ள 1 முதல் 45 கடைகளும், மற்றும் அதற்கும் செல்லும் நடைபாதைகளும், நீங்கலாக பின் பக்கம் (கிழக்கே) உள்ள காலியிடத்தில் தரையில் வைத்து விற்பனை செய்யும் சிறு வியாபாரிகளிடம் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம். 2022-2023 2024-2024 மற்றும் 2024 - 2025 வரை 3 ஆண்டுக்கான பொதுஏலம் மற்றும்</td><td>தீர்மான எண்:345<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>ஒப்பந்தப்புள்ளி 27.12.2022 தேதியில் நடத்தப்பட்டது. மேற்படி இனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி எதுவும் வரப்படவில்லை இவ் வினத்தில் 3 ஏலதார்கள் கீழ்காணும் விபரப்படி ஏலக்கேள்வி கேட்டுள்ளார்கள்.<br><br><u>ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் விபரம்</u><br><table><tr><th>வ.எண்</th><th>ஏலதாரர் பெயர்</th><th>ஏலகேள்வி விபரம்</th></tr><tr><td>1</td><td>எஸ்.சுரேஷ்குமார்</td><td>ரூ.10,58,000/-</td></tr><tr><td>2</td><td>ஆ.பாண்டியன்</td><td>ரூ10,59,000/</td></tr><tr><td>3</td><td>க.சுப்பிரமணியன்</td><td>ரூ10,60,000/-</td></tr></table><br>இதில் க.சுப்பிரமணியன் அவர்கள் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியாக ரூ.10,60,000/- கேட்டுள்ளார். குத்தகை தொகை 3 ஆண்டு சராசரி காட்டிலும் உயர்வாகவும் அலுவலகத்தின் மூலம் வசூல் தொகையை காட்லும் உயர்வாக உள்ளது. எனவே மேற்காணும் குத்தகை இனத்தில் ஆண்டுக்கு 5 சதவிதம் உயர்வு செய்து, ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு சாமிநாதன் தினசரி மார்கெட் தரைகடை குத்தகை வசூல் செய்ய உரிமம் அனுமதித்தும் குத்தகைதாரர்க்கு ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.<br>ந.க.எண்.1297/2022/அ1<br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்</td><td></td></tr>
<tr><td>30.12.2022</td><td>29</td><td>திருமதி. K.கௌதமி, 7-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் பொருள்<br>வார்டு எண்.7 முத்துநகர் மற்றும் பெரியார் நகர், கீழ்க்கடை வீதி ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் அல்லாத உப்புநீர் குழாய் அமைத்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.</td><td>தீர்மான எண்:346<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>30.12.2022</td><td>30</td><td>திருமதி. கா.முத்துமாங்கனி, 4-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் பொருள்<br>1. 4-வது வார்டில் உள்ள தொடக்கப்பள்ளியில் 2 வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் வேண்டும்.<br>2. 4-வது வார்டு வடக்கு தெருவில் வடபுறம் உள்ள வீடுகளுக்கு தண்ணீர் குழாய்கள் அமைக்க வேண்டும் என்பதனை தெரிவித்துக்கொள்கிறேன்.<br>3. 4-வது வார்டு பெரிய ஏரி சாலையில் கறிகடை பக்கம் சாக்கடை வசதி அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.</td><td>தீர்மான எண்:347<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

**துறையூர்நகராட்சி**

2022–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30.12.2022 வெள்ளிக்கிழமை காலை 10.45 மணிக்கு நகராட்சி நகர் மன்ற கூட்ட அரங்கில் கீழ் கண்ட பொருள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய அவசரக்கூட்டத்தின் நடவடிக்கைகள்

முன்னிலை: நகர்மன்றத்தலைவர்
துறையூர்.

| மன்ற கூட்டம் நடை பெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள் | | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|---|
| 30.12.2022 | **01** | துறையூர்நகராட்சி வார்டு எண் 8–ல் மினி பவர்பம்புடன் கூடிய ஆழ்துளைக்கிணறு அமைக்கம் பணிக்கு மதீப்பீடு ரூ.3.00 இலட்த்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>**(ந.க.எண். 4213/2022/இ1)**<br>**அலுவலககுறிப்பு: அனுமதிக்கலாம்** | **தீர்மான எண்:348**<br>**அனுமதிக்கப்பட்டது** |

ஒம்/-இ.செல்வராணி
நகர்மன்றதலைவர்
துறையூர்நகராட்சி

/உண்மை நகல் /

ஆணையர்,
துறையூர்நகராட்சி